1979 அக்டோபர் 30]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவுவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஏ) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, "1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, ஒரு அப்ஜெக்ஷன். அது டெக்னிக்கல் பாயின்ட். ஒரு ஆர்டினன்சை ரீபிளேஸ் செய்வதற்காக இந்த பில்லை கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் ஒரு ஆர்டினன்ஸ் போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அதை ரீபிளேஸ் பண்ணவில்லை. அப்படியானால் அதற்கு என்ன அர்த்தம்? அது அப்படியே லாப்ஸ் ஆகிவிட்டதா? அது என்னவாயிற்று என்று தெரியாமலேயே இரண்டாவது ஆர்டினன்சுக்காக இந்த பில்லை இன்ட்ரொடியூஸ் செய்வது சரிதானா? இது தேவையா? இதில்